DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.158/2023**

Deposition of witness for Prosecution அ.சா.3

| | | |
|---|---|---|
| பெயர் | : | முருகப்பன் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | பழனியப்பன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 04.03.2026

2 ம் எதிரி ராஜா ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தேவகோட்டையில் வசித்து ஜெராக்ஸ் கடை நடத்தி வருகிறேன். எதிரிகளை தெரியாது. என் நண்பர் அண்ணாமலை வீட்டில் திருடுபோனதற்கு நானும் சண்முகவேலும் சாட்சியாக போனோம். காவல்நிலையத்தில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் 1ம் எதிரி முருகேசனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையதுதான். என்னிடம் காண்பிக்கப்படும் 2-ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி கையெழுத்துக்களை எதற்காக போட்டேன் என்று தெரியாது. (**மேற்படி 1ம் எதிரி முருகேசனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1ம் கையெழுத்து அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி 2-ம் எதிரியின்**

**ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையதுதான். அ.சாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** என்னிடம் காண்பிக்கப்படும் 1ம் எதிரி வீட்டின் முன்பு கைப்பற்றப்பட்ட சொத்துக்களுக்கான கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையதுதான். **(மேற்படி 1ம் எதிரி வீட்டின் முன்பு கைப்பற்றப்பட்ட சொத்துக்களுக்கான கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து அ.சாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** என்னிடம் காண்பிக்கப்படும் 2-ம் எதிரி வீட்டின் முன்பு கைப்பற்றப்பட்ட சொத்துக்களுக்கான கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையதுதான். **(மேற்படி 2-ம் எதிரி வீட்டின் முன்பு கைப்பற்றப்பட்ட சொத்துக்களுக்கான கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து அ.சாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன்பேரில் இந்நீதிமன்றம் அனுமதி வழங்கப்பட்டது.)**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:

கடந்த 16.10.2016ம் தேதி தேவகோட்டை நகர் காவல் நிலைய ஆய்வாளர் விசாரணைசெய்தபோது எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி கடந்த 16.10.2016ம் தேதி 1ம் எதிரி வீட்டின் முன்பாக திருட்டுப் பொருட்கள் கைப்பற்றப்படதாகவும், 2ம் எதிரியின் வீட்டின் முன்பு திருட்டுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அதற்காக கையொப்பம் செய்துவிட்டு பின்னிட்டு போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை**

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.